உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

முப்பத்தோராந்தொகுதி.

ஸ்ரீமுக—பவ ௵.

Vol. XXXI.

1933–1934.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

முப்பத்தோராந்தொகுதியின் உள்ளுறை

விஷயம்.		எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக்குறிப்பு:-		பத்திராசிரியர்	அஅ
உதிர்மலர்மாலை:—		ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதியார்.	கஉக
உலோச்சனார்:—	,,	ஊ. சா. வேங்கடராமையர்	உடு
எயினர்:—	,,	V. R. இராமசந்திர தீக்ஷிதர் M.A.	உக
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	,,	ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், B.A.	க, கூச, ககங, கஉகூ, கடுகூ, கசுகூ, உ0கூ, உஉடு.
கருமகருத்தா:—	,,	ம. நா. சோமசுந்தரம்பிள்ளை.	கசகூ.
சங்கீதம்:—	,,	V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் BA, BL.	உசகூ
செழுங்கதிர்ச்செல்வம்:-	,,	K. S. நவநீதகிருஷ்ணபாரதியார்.	கஉசு, கஙஎ, கசுச
ஞாயிற்றினைவழிபடல்:-	,,	வை. சுந்தரேசவாண்டையார்	ககஎ.
தமிழ்ச்சங்கம் செய்ய வேண்டிய வேலை:—	,,	இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை— தி.ந. S. சோமசுந்தரதேசிகர்.	ஙகூ
தமிழ்ப்புத்தகக்காட்சிச்சாலையைத்திறந்துவைத்தவரின் விரிவுரை:-			சுஉ
தமிழன்பர்மஹாநாட்டுவரவேற்புப்பிரசங்கம்:-			எக
தமிழன்பர்மஹாநாட்டைத்திறந்துவைத்தவரின்விரிவுரை:-			சுகூ
தருக்கசங்கிரஹ சோதனம்:—		பத்திராசிரியர். (திரு. நா.)	உசக
நரிவிருத்த ஆராய்ச்சி:-		ஸ்ரீமத். பண்டித. இராமசுப்பிரமணியநாவலர்.	ககூஎ.
பத்திராசிரியர் குறிப்பு:—			சுக.
பதிற்றுப்பத்து:—		வித்வான் R. வீராகவய்யங்கார்.	கஅடு

பரிசளிப்புப் பாராட்டு:— உதவிப்பத்திராசிரியர். அகூ

பரிசோதனத்தொடர்:- ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார். உசுரு

பரிமேலழகருரைத்திறம்:— பத்திராசிரியர். (திரு. நா.) உகள

பல்லவர்:— ஸ்ரீமத். S. சோமசுந்தரதேசிகர். களகூ

பாரிபாட்டுச் சிறப்புப்பாயிரம்:— ஸ்ரீமத். மு. இராகவையங்கார். சூ0

பிழையும் திருத்தமும்:— கசுஅ

பிறர் நம்மைக் கண்டவிதம்:— ,, திரு. S. சோமசுந்தரதேசிகர். கள

புத்தகங்களின் பயன்:— ,, ஊ. சா. வேங்கடராமையர். உநரு

மதிப்புரை:— பத்திராசிரியர். ருச, அ0, க0கூ, கசஉ, உநஅ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 31-ஆம் வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி முதலியன:— சக—ருந

ஷை 33-ஆம் வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம். உருசு

ஷை நிர்வாகஸபைத்தீர்மானங்கள். ருள, அந- அஅ, கசுள, உசுக

ஷை மஹாஸபைத்தீர்மானங்கள். ருஅ, உசுந

மனுஷ்யத்வம்:— (மக்கட்டன்மை) ஸ்ரீமத். V. S இராமஸ்வாமி சாஸ்திரிகள் BA. BL. உஅந

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்:— பத்திராசிரியர் (திரு. நா.) கசரு

வாங்குவோர்வன்மை:— ,, ஊ. சா. வேங்கடராமையர் கநந

வாழ்த்துரை:— மாட்சிமிக்க சென்னைகவர்னர் துரையவர்கள். சுரு

வினையெச்சமுடிபு:— பத்திராசிரியர் (திரு நா.) ககூந

வெள்ளிவீதியார்:— ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையர். உளந

அநுபந்தம்.

விஷயங்கள்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ௩, ௬)

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— (பகுதி ௩, ௬)

தனித்தமிழ்ப்பரீக்ஷைப் பாடவிவரக்குறிப்பு:- (பகுதி ௩)

மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:— (பகுதி ௨—௧௨)

நூல்கள்.

[முற்றுப்பெற்றது.]

சங்கரநயினார்கோயில் அந்தாதி (குறிப்புரையுடன்:-) } ,, மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. வே. சாமிநாதையர். (பகுதி ௧—௫)

[முற்றுப்பெறாதவை.]

கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் (பகுதி௭-௧௨)

குருகைமான்மியம்:- } T. K. இராமாநுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர் (பகுதி ௧, ௪—௮, ௧0)

பெருந்தொகை (விசேடக்குறிப்பு):- } ,, மு. இராகவையங்கார். (பகுதி ௧-௩, ௫-௧௧)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] ஸ்ரீமுகஹு கார்த்திகைமீ [பகுதி ௧.
Vol. XXXI November-December-1933. No. 1.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௩௰-ஆம் தொகுதியின் ௨௭௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கிட்கிந்தைப் படலம்.

கிட்கிந்தைநகரில் நிகழ்ந்த செய்திகளைக் கூறுவது.

சுக்கிரீவனிடம், அவன் குறித்தகாலத்தில் வராதகாரணந் தெரிந்துவர, இராமன் இலக்குமணனை அனுப்புதல்.

[இராமன், இலக்குமணனை நோக்கி 'சுக்கிரீவன், சொன்ன தவணை கழிந்தும் வந்தானில்லை. அவன் பகையையொழித்துச் செல்வத்தை அளித்த நமது உதவியை மறந்து தருமநெறி தவறினான். அவன், நமது அன்பை நினையானாயினும், அவனை அவன் அரசவாழ்வோடும் அழிக்கவல்ல நமது ஆற்றலையும் நினைந்தானில்லை. செய்ந்நன்றிகொன்று சினேகத்தைச் சிதைத்து மெய்யைவிட்டுப் பொய்யைப்பற்றிய புல்லனைக் கொல்லுதல் குற்றமாகாது. நீ போய் அவன் மனநிலை அறிந்து வா. பொல்லாரை மாய்த்து நல்லாரைக் காத்தற்கு நான் எடுத்த கோதண்டமும் அம்பும் உண்டு; கூற்றுவனும் உண்டென்று கூறு. சொன்ன சொற்படி வாரானானால், அவன் நாடழியும், நகரழியும், உற்றாரழிவர், அவனும் அழிவன் என்னும் உண்மையை உறுதியாக உரை. அவன் சாற்றும் விடை ஏற்றதாயில்லையானால், அதற்காக அவனை அழித்துவிடாமல், அவன் சொன்னதை என்னிடம் வந்துசொல்லு.' என்றான்.

இலக்குமணன் ருசியமுக பருவதத்தை நீங்கிக் கிட்கிந்தகிரியை அடைதல்.

இலக்குமணன், வில்லும் அம்பறாத்தூணியும் பூண்டு, இராமனை வணங்கிப் பிரியாவிடை* பெற்றுச் சென்றான். அவன் வழியிலுள்ள மரங்களடர்ந்த வனங்களூடு வேகமாகச் சென்றது, இராமனம்பு மராமரங்களை உருவிச்சென்றதை ஒத்தது. அவன் ருசியமுகமலையினின்று கிட்கிந்தைமலையை அடைந்தது, சூரியன் உதயகிரியினின்று அத்தமனகிரியை அடைந்ததுபோன்றது; அன்றி, ஒருசிங்கம் ஒரு மலையினின்று மற்றொருமலையை உற்றதும் ஒத்தது.

இலக்குமணன் வருதலைக்கண்ட வானரர் அங்கதனுக்குணர்த்த அவன் சுக்கிரீவனுக்குணர்த்தமுயன்று முடியாமல் அநுமனாதியரோடு சென்று தாரைக்குணர்த்தியசமயத்தில் வானரர் நகரவாயிலைத் தாளிட்டுப் பத்திரப்படுத்தல்.

இலக்குமணனைக்கண்ட வானரர், இயமனைக் கண்டவர்போல அஞ்சி, அங்கதனிடம் ஓடி 'இலக்குமணன் வெகு வேகமாய் மிகு கோபமாய் வருகிறான்' என்றனர். அவன், அவனைத் தூரத்தில் நின்று நோக்கி, அகக்கருத்தை முகக்குறிப்பால் அறிந்து சுக்கிரீவனை அடைந்தான். அப்போது, அவன், மென்மலர்மெத்தைமீது, பள்ளிகொண்டு, மாதர் பாதம் வருட, மந்தமாருதம் வந்துலாவ, இனிதாகத் துயில்வானாயிருந்தான். அங்கதன், அவன் தூக்கத்தை நீக்கற்குச் 'சேவிக்கின்றேன்' என்று செப்பித் தெண்டனிட்டு 'ஐய! இலக்குமணன், கோபாவேசனாய் வந்திருக்கிறான்; உன் சித்தம் யாது?' என்றான். இவ்வாறு கூறியதைப் பெருஞ்செல்வக் கள்ளும் பெண்ணின்பக் கள்ளும் ஒருங்கு சேர்ந்து உறுத்திய மயக்க வயத்தனாயிருந்த அவன் ஒருசிறிதும் உணராமை கண்டு, அங்கதன், அங்கிருந்து ஆவது யாவதுமில்லையென்று அகன்று, அநுமனை அடைந்து, அவனையும் அவனைச் சூழ்ந்திருந்த வானரவீரரையும் கூட்டிக்கொண்டு சென்று, தன் தாய் தாரையை அடுத்து, இலக்குமணன்வரவைத் தெரிவித்து 'இப்போது யாது செய்வது?' என வினவ, அவள், 'நீங்கள் தீயசெயல்களைச் செய்வீர்கள்,

* உள்ளம்பிரியாது உடல்பிரியப் பெறும் அநுமதி.

செய்துவிட்டு அதனால் நேரும் தீங்கு நீங்கும் வழி தேடுவீர்கள். உதவி கொன்ற உங்களுக்கு உய்தி உண்டோ? நீங்கள் செய்த தீவினைப்பயனை நீங்கள் அடையுங்காலம் நெருங்கியது. இலக்குமணனை எதிர்ப்பீரேல், இறப்பீர்' என்று கண்டித்துக் கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில், குரங்குக் கூட்டங்கள், இலக்குமணனைத் தடுத்தற்கு நகர வாசற்கதவைத் தாளிட்டு, அது தள்ளுண்ணாதபடி மலைகளையும் மரங்களையும் அடர்த்தியாக அடுக்கிச் சார்த்தி உறுதியாகப் பத்திரப்படுத்தின. அன்றி, அவ்வளவு தடைகளையும் அப்புறப்படுத்துவானாகில், அடித்துத் தடுத்தற்கு ஆயத்தமாய் மரங்களைச் சேகரித்துவைத்துக்கொண்டு மதிற்பக்கத்திலே கூட்டமாய்க் கூடியிருந்தன.

இலக்குமணன் நகருட் புகுதல்.

கதவின் நிலைமையைக் கண்ட இலக்குமணன், நம்மைத் தடுக்கும் உபாயமோ இது, என்று நகைத்து, அதனை அலட்சியமாக அடியினால் தள்ள, அது, அதன்மேற் சார்த்தியிருந்த மலைகளோடும் மரங்களோடும் பல சுக்கல்களாய்ப் பல யோசனை தூரம் பறந்தோடினது. அது கண்ட குரங்குக் கூட்டம், அச்சம் பிடர்பிடித்துத் தள்ளக் காடுகளூடு ஓடி ஒளித்தது. வானரம் நீங்கின மாநகரம், நட்சத்திரம் இல்லாத வானம் போலப் பொலிவிழந்தது. இலக்குமணன் நகரினுள்ளே புகுந்தான்.

அவனைத் தாரை தடுத்தல்.

தன் இனத்தாரைக் கண்டித்துக் கொண்டிருந்த தாரையை அங்கதன் 'அம்மா! இலக்குமணன் அரண்மனையை அடுக்க வந்துவிட்டானே; என் செய்வேம்?' என வினவியபோது, அநுமான், 'தாயே, நீயே சென்று வாயிலினின்று வழிமறித்தால், விலகி ஏகுவான். இதுவே இப்போது செய்யத்தக்க தந்திரம்' என்றான். எனவே, அவள், 'நீங்களெல்லீரும் நீங்குமின்கள். யான் சென்று இலக்குமணன் மனவருத்தத்தை மாற்றுவேன்' என்று, சூழ்ந்து நின்ற தோழியரோடு அந்தப்புரத்தை அகன்று, அரண்மனைவாசலையடைந்து, அதனுள்ளே புகுவானை இலக்குமணனை வழிமறித்து நின்றாள்.

காற்சிலம்பொலி போர்ப்பறைமுழக்காகக் கடிதடம்* தேராக, அதன் மேலுள்ள இடையும் இடையிலணிந்த சேலையும், கொடியும் கொடிச்சீலையு

---

*அல்குல் நிதம்பம் கடிதடம் (கடி-அரை; தடம்-இடம்) அனை: ஒரு பொருட் பன்மொழிகள்.

மாகத், தனம் யானையாக, புருவமும் கண்ணும், வில்லும் அம்புமாக, மாதர்கூட்டமாகிய சேனை எதிர்ந்தபோது, இலக்குமணன், கொண்டிருந்த கோபம் விண்டொழிந்துபோக, முகம் அவன் முயற்சியின்றித் தானே மாறித் திரும்ப, அந்தச் சேனையை எதிர்த்தல் கிடக்க, பார்க்கவேயும் பயந்தவனாய்த் தலையைச் சாய்த்து வில்லைத் தரையிலூன்றி மாமிமார் மத்தியில் வந்த மருமகன்போல நின்றான். அவனைநோக்கித் தாரை கூறுகின்றாள்.]

இலக்குமணனை நோக்கித் தாரை கூறுதல்.

504. 'அந்தமில் காலம் நோற்ற ஆற்றல்உண் டாயி னன்றி,
இந்திரன் முதலி னோரால் எய்தலாம் இயல்பிற் றன்றே:
மைந்த! நின் பாதம் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தேம் ;
உய்ந்தனம்; வினையும் தீர்ந்தேம்; உறுதிவே றிதனின் உண்டோ!"

இ-ள். 'வீரனே! (நீ இந்திரன்முதலோர்மனைக்கு வருதலான அரிய பேறு, அவர்கள், முன்பு) முடிவிலாத (நெடிய) காலம் (வருந்தி) நோற்ற (தபோ) பலம் (உடையராக) இருந்தாலன்றி, (அந்த) இந்திரன்முதலானோரும் பெறக்கூடியதன்று. (அப்படியிருக்க, நீ) திருவடிகளால் (நடந்து) எங்கள் கிருகத்துக்கு எழுந்தருளப்பெற்று (மிகவும் உயர்ந்த இகலோக) வாழ்வடைந்தேம். (யாங்கள் செய்திருந்த தீ) வினை(ப் பயன்) தீரப்பெற்று ஈடேறி (ப் பரலோக வாழ்வுக்குப் பாத்திரரா) னேம். (இம்மை மறுமை நலங்க ளிரண்டும் ஒருங்கெய்திய) இதனைக் காட்டிலும் (சிறப்பானதாக யாங்கள் அடையக்கூடிய) நன்மை வேறுண்டோ!" (என்று இலக்குமணனைநோக்கித் தாரை கூறினாள்.)

அந்தம் - முடிவு. நோற்றல் - தவம்செய்தல். ஆற்றல் - பலம். எய்தல் - அடைதல். இயல்பு - தன்மை. இயல்பிற்று - தன்மையுடையது. ஏ, தேற்றப்பொருளில்வந்த இடைச்சொல். மைந்து - வீரம். மைந்தன் - வீரன். உய்தல் - ஈடேறல், இங்கே, உயர்ந்த மோட்சகதி அடைவேமென்னும் பொருளுடைய 'உய்வேம்' என்பது துணிவுபற்றி 'உய்ந்தேம்' என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. உறுதி - நன்மை. 'உறுதி பயப்ப கடைபோகா வேனும்'. 'இயல்பிற்றன்றே' என்பதைக்

கொண்டு முடியும் வாக்கியத்துக்கு 'மனைவரப்பெறல்' என்ற எழுவாய் அடுத்த வாக்கியத்தில் 'மனைவரப்பெற்று' என்பதிலிருந்து பெறற்பாலதாயிருத்தல் கவனிக்கத்தக்கது. 'இயல்பிற்றன்றால்' என்னும் பாடத்தில் ஆல் என்பது ஆதலால் என்னும் பொருளுடையது.

யாங்கள் மாதவமுடைமையின், எங்கள் இல்லம் உன் திருவடி தீண்டப்பெற்றது என்பது கருத்து.

இந்திரன் உன் வரவை எய்தப்பெறுவானாயின், அது, அவன் இந்திரபதவியுடைமையினால்மட்டுமன்று, அப்பதவியோடு அவன் முன் அளவற்றகாலம் வருந்திப் புரிந்த தபோபலமுடைமையினாலுமென்பாள் 'அந்தமில் காலம் நோற்ற ஆற்றல் உண்டாயி னன்றி, இந்திரன் முதலினோரால் எய்தலாம் இயல்பிற் றன்றே' என்றாள்.

மாசனம் சூழ வாகனமேறி வரற்பாலனான நீ, தன்னந்தனியனாய்த் தாள்வருந்தத் தரையில் நடந்துவந்தாயென்பாள் 'பாதங்கொண்டுவா' என்றாள்.

சக்கரவர்த்திகுமாரனான நீ வரப்பெற்றமையால், எங்கள்வாழ்வு மேன்மை அடைந்ததென்பாள் 'வாழ்ந்தேம்' என்றாள்.

நீ மகாவிட்டுணுவின் அமிசாவதாரனாய்க் கடவுட்டன்மையுடையவனாதலால், உன்வரவு, யாங்கள் நரகத்தை யடையாமல் எங்கள் தீவினையனைத்தையும் தீர்த்ததல்லாமல், எங்களைப் பரமபதமடையும் பாக்கியமுடையராகச்செய்ததென்பாள் 'உய்ந்தனம் வினையும் தீர்ந்தேம் உறுதிவே றிதனி னுண்டோ' என்றாள்.

இலக்குமணனது கடவுட்டன்மைபோல, அவனுடைய இராசத்தன்மையும், அவன் வரவு இந்திரனுக்குப் பெறவரிதாயிருந்ததற் கேதுவாம்; எவ்வாறெனில், இலக்குமணன், சம்பராசுரன் கவர்ந்துகொண்ட தேவலோக ராச்சியத்தை இந்திரனுக்கு மீட்டுக்கொடுத்த தசரத சக்கரவர்த்தி குமாரனாதலா லென்க.

தாரை இலக்குமணனை வந்த காரியம் யாதென வினவல்.

[தாரை, இலக்குமணனை நோக்கி, 'வானரசேனை, நீ வேகமாக வந்தது கண்டு, அதன் காரணம் அறியாது கலங்கி அஞ்சி நின்றது. இன்னும்,

இராமனை இணைபிரியாத நீ இன்று தனியாய் இங்கே எய்திய காரியம் யாதோ' எனக்கேட்டாள். கேட்டது யாரென்று தெரியக் கருதித் தலையை நிமிர்த்துப் பார்த்து, அமங்கலியான தாரையைக் கண்டு, அவள்போல அமங்கலியரான தன் அன்னையரை நினைந்து வருந்தினான். பூண்கள் பூணாமல் பூமாலை சூடாமல் சந்தனம் பூசாமல் வெள்ளைப்புடவையால், மார்போடு, மங்கலியம் கழித்த கழுத்தையும் சேர்த்துப் போர்த்துக் கண்டவர் இரங்கும் கைம்மைக்கோலத்தோடுநின்ற தாரையை நோக்கிய இலக்குமணன், அவளது அதிபரிதாபநிலையும் தனது தாயர்நினைவும் சேர்ந்து துன்புறுத்தக், கண்கள் நீர்துளிக்க நின்றான். தன் தாயர் தாரையின் தன்மையராயிருப்பரென்ற நினைவு தோன்ற, வேறொன்றுந் தோன்றாது நின்று சிறிதுநேரம் சென்றபின்பு, தன்னை வினவினாட்குத் தான் உத்தரமாக ஓர் உரையும் உரையாதிருத்தல் உசிதமன்றென்ற உணர்வு உதிக்கத் தான் வந்த காரணத்தைச் சாற்றுவானானான்.

இலக்குமணன், சுக்கிரீவன் சொன்ன தவணையில் வராதகாரணம் அறிய வந்தேனெனல்.

'சுக்கிரீவன், தானும் தன் சேனையுமாகச் சீதாதேவியைத் தேடிக் கொணர்ந்து சேர்ப்பதாக வாக்களித்ததை மறந்துவிட்டான். அவன் நிலைமையை அறிந்துவா, என்று எங்கோன் இட்ட கட்டளைப்படி வந்தேன். சுக்கிரீவன் செய்தது யாதென்று சொல்வாயாக' என்றான்.

தாரை கூறுதல்.

'சினங்கொள்ளாதே. சிறியோர் தீமை செய்தால், தாயே போலும் தயையுடைய நீயே பொறாயானால், யாரே பொறுப்பார். சுக்கிரீவன், சொன்ன சொல்லை மறந்தானல்லன். சேனைகள் திரட்டிவரத் திசைக ளனைத்திலும் செல்லும்படி திரள்திரளாகத் தூதரைச்செல்லவிட்டுப் பல பக்கங்களிலிருந்தும் படைகள் வருதலை எதிர்பார்த்திருக்கின்றான். இதுவே, தாமத காரணம். படைகள் வருங்காலமும் வந்துவிட்டது. சரணடைந்தார்க்குத் தாயினும் தயைமிகுந்த நீங்கள் சற்றுத் தாமத மாவதைச் சகித்தல்வேண்டும்.

நீங்கள் அளித்த செல்வம், அதனை அடைந்தாரை மனக்களிப்பு மிகப்பெருக்கி மதோன்மத்தராக்கி உங்கள் கட்டளைகடக்கச்செய்தால்,

அதற்கு முதற்காரணம் நீங்களாயிருத்தல், நீங்கள் பொறுத்தல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. உபகாரிகளான உங்களை உபேட்சித்து உங்கள் உத்தரவை உல்லங்கனஞ் செய்வாரானால், அவர்கள் இழிசனராதலன்றி இம்மையில் ஏழைகளாய் மறுமையில் நரகத்தில் அழுந்துவரன்றோ. தேவிபொருட்டு நேரும் போரில், பகைவரைக் கொல்வாராகவும் கொல்லமுடியாவிட்டால் கொல்லுண்பாராகவும் ஆகாமற்போனால், அவர்கள் சிநேகமும் சிநேகமாமோ. வாளி ஒன்றால் வாலியை மாய்த்த உங்களுக்குத் துணையும் வேண்டுமோ. எந்தத் துணையும் உங்கள் வில்லினும் மிக்க துணையாமோ. சீதையைக் கவர்ந்தவனைச் செயித்தற்கன்றிச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கத் தக்காரைத் தேடுகின்றீர்கள். அந்தத் தேடும் தொழிலைச் சொல்லாது செய்தற்குக் கடன்பூண்டவர் உம்மரல் பகை ஒழிந்து பாக்கியமடைந்த சுக்கிரீவாதியர்' என்றாள்.

அநுமான், இலக்குமணன் கோபம்நீக்கிய குறிப்பறிந்துவந்து கும்பிடல்.

இவ்வாறு தாரை கூறியதை இலக்குமணன் இனிதாகக்கேட்டு இன்னருள்சுரந்து நின்றான். அதனைக் கண்டு, கோபம்நீங்கினனென்று கொண்டு, அநுமான், அருகில்வந்து, அடிபணிந்து நின்றான். இலக்குமணன், அவனைநோக்கிக் 'கார்காலம் கழிந்தவுடன் சேனையுடன் திரும்பவும் வரவேண்டுமென்று செப்பியதை நீயும் மறந்தாயன்றோ' என அநுமான் கூறுகின்றான்.]

அநுமான், மற்றைப் பாவங்கள் ஒவ்வொன்றுக்கும் பல
பரிகாரங்களுண்டு, செய்ந்நன்றிகொன்றபாவத்துக்கு ஒருபரிகாரமும்
இல்லை யெனல்

505 'சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம், மாற்றலாம் ஆற்றல்; மாயா
உதவிகொன்றார்க்கொன் றேனும்ஒழிக்கலாம்உபாயம்உண்டோ!'

இ-ள். 'தாயையும் தந்தையையும் ஆசாரியனையும் அந்தணரையும் பசுக்களையும் சிசுக்களையும் பெண்களையும் கொலைசெய்தவர்களுக்கும் (அவர்கள் கொடிய பாவத்தை) மாற்றக்கூடிய (பல பரிகாரச்) செயல்க

ளுண்டு. செய்ந்நன்றிக்கொலைசெய்தவர்களுக்கு (அவர்கள் பாவத்தை) ஒழிக்கக்கூடிய உபாயம் ஒன்றுமில்லை.'

சிதைதல் - கெடுதல். காதல் - அன்பு. பதவி - நிலை. தெய்வம் பதவி அந்தணர் - தேவர்பதவிபோன்ற பதவியுடைய பிராமணர். அவர்களுக்குப் பூசுரர், பூதேவர் என்ற பெயர்களிருத்தல் காண்க. ஆ - பசு. பாலர் - குழந்தைகள். பாவை - பெண். வதை - கொலை.

தந்தை முதலியோர் அன்பு யாதாயினு மொருகாலத்தில் ஏதேனு மொருகாரணத்தால் கெடுதல் கூடும்; தாயன்பு எக்காலத்தும் எக்காரணத்தாலும் கெடுதலில்லை யென்பது கருதிச் 'சிதைவகல் காதற்றாய்' என்றான். இவ்வாறாகச், 'சிதைவகல்' என்ற அடை, எதுகையி லிருத்தலால், எதுகை நிரப்பும் பயன்மட்டுமுள்ள சாதாரண அடையா யில்லாமல், சிறந்த 'கருத்துடை அடை'யாயிருத்தல் கவனிக்கத்தக்கது. கருத்துடை அடை - குறித்தகருத்துக்குரிய விசேடணம்.

'மாற்றலாம்' என்பது, நிற்கும் இடத்தின் ஆற்றலால், பாவத்தை மாற்றலாமெனப் பொருள்படுகின்றது. இங்கே 'பாவத்தை' என்பது போல 'உள்ளொற்றி' என்ற குறளில் 'உண்டு' அவாய்நிலையாய் வந்தது காண்க. அவ்வாறே, 'ஆற்றல்,' கழுவாய் ஆற்றல் (=பிராயச்சித்தஞ் செய்தல்) எனப் பொருள்படுவதாகக்கொள்ளும்படி 'கழுவாய்' அவாய் நிலையாக வந்ததெனலாம். இப்பாட்டோடு கருத்தொற்றுமையுடைய,

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே

என்ற புறநானூற்றுப்பாட்டைக் கருத்துள்வைத்து இந்தப்பாட்டைக் கம்பர் பாடியிருக்கலாம். அப்படி யிருந்தால், அது, ஆற்றல் கழுவாய் ஆற்றலெனப் பொருள்படுவதாகக் கொண்டதற்குத் துணைசெய்வதாம். ஆற்றல் வல்லமை யெனறுமாம். ஆற்றலுக்குப் பிரதியாக அடுத்த அடியில் வரும் உபாயம் ஆற்றலுக்குப் பொருளெனலும் பொருந்தும். அப்

பொருள் கொண்டால், உதவி கொன்ற பாவமொழிக்கும் உபாயம் ஒன்று மில்லை யென்பதுபற்றி, ஆற்றலைப் பன்மையாகக்கொண்டு, ஆற்றலுக்குப் (பல) உபாயங்கள் என்று பொருள்கொள்ளல் தகுதியாம். உபாயம், இங்கே வழி யென்னும் பொருளுடையதாய்ப் பாவத்தைத் தீர்க்கும் வழியாகிய பிராயச்சித்தத்தையுணர்த்தல் தெளிவு. பிராயச்சித்தம், கழுவாய், பாவசாந்தி, பாவபரிகாரம் என்பவை ஒருபொருள் குறித்தவை. மாயா உதவி - அழியாத உபகாரம்.

'மாற்றலாம்' என்பதுபோல, 'ஒழிக்கலாம்' என்பதும் நிற்கும் இடத்தமைவதற்றலால் பாவத்தை யொழிக்கலாமெனப் பொருள்படல் கவனித்தற்குரியது.

'உதவிகொன்றார்', என்பதன்பொருள், செய்ந்நன்றிக்கொலைப் பாவஞ்செய்தாராதலால், 'மாயா (—அழியாத) உதவி கொன்றார்' என்பதில் உள்ள 'மாயா' என்பதை 'உதவி'க்கு அடையாக்காது பாவத்துக்கு அடையாக்கினால், அது, உதவிகொன்ற பாவம் 'ஒழிக்கலாம் உபாயம் உண்டோ' எனப்பட்டதற்குக் காரணம் கூறியவாறும்.

எல்லாப் பாவங்களுள்ளும் கொடியது, கொலைப்பாவம். அப்படிப்பட்ட கொலைப்பாவங்க ளெல்லாவற்றுள்ளும் கொடியது, செய்ந்நன்றிக் கொலைப்பாவம். மற்றெல்லாக் கொலைப்பாவங்களும் தீர, அவை யொவ்வொன்றுக்கும், பல பரிகாரங்களுண்டு. செய்ந்நன்றிக் கொலைப் பாவத்தைத் தீர்க்கும் பரிகாரம் ஒன்றுமே யில்லையென்பது கருத்து.

கம்பர் இந்தப்பாட்டில்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்ற குறளின்பொருளை விரித்துரைத்திருத்தல், அவர்,

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

என்ற குறட்கருத்தை, இதனினும் சுருங்கக்கூறவியலாதென்னுமாறு,

கொள்ளுதல் தீது கொடேப்பது நன்றால்

என்று (வேள்விப்படலம் உகூ-ம் செய்யுளில்) குறுக்கியுரைத்த கவித்திறத்தை நினைப்புறுத்துகின்றது.

அநுமான் இலக்குமணனுக்குச் சாந்தமுண்டாகும்படிபேசி அரண்மனைக்குள் வரும்படி அழைத்தல்.

['உங்களுக்கும் சுக்கிரீவனுக்கும் இட்டம் ஏற்படுதற்கு ஏதுவாயிருந்தது என்செயலன்றோ? என்னாலேற்பட்ட இட்டம் கெட்டதானால், என் அறிவு கெட்டதாமன்றோ? நாங்கள் உங்கள் அன்புக்குப் பாத்திராய், என்றும் தொண்டுசெய்யத் தவறேம். எங்கள் தவமும் நீங்களே, தருமமும் நீங்களே, பெற்றோர் முதலிய யாவரும் நீங்களே, தேவரும் நீங்களே யென்பது என் உள்ளத்துள் ஊன்றியுள்ள உண்மைக் கொள்கை. எங்கள் பத்திகாரணமாகவன்றி, உங்கள் சத்திகாரணமாகவும் உங்கள் கட்டளைகளைச் செய்தே தீரக்கடவேமாயுள்ளேம். நீங்கள் எங்கள்மேற் கோபங்கொண்டீர்களானால், நாங்கள் தப்பிப் பிழைக்கும் சார்பு உங்கள் இரக்கமன்றி எதுவுமில்லை.

சுக்கிரீவன், இராமன்கட்டளையை இலட்சியஞ்செய்யாதிருக்கவில்லை. படைதிரட்டுவோரைப் பல பக்கங்களுக்கும் அனுப்பிப் படைவரவு பார்த்திருக்கிறான். அவன் யாதோருதவியும் செய்யாதிருக்கவேயும், அவனுக்குப் பிறரெவராலும் செய்யமுடியாத பேருதவிசெய்த உங்களுக்கு உண்மையற்றவனானால், அவன் பிறந்ததனாலாய பயனைப் பெறாதவனாவதன்றி, இறந்தபின் எரிவாய்நரகம் எய்துவானுமாவனென்பது நிச்சயம்.

நீ முற்றத்தில் நிற்றல் முறையன்று. இதனை எதிரிகள் அறிகுவரானால், உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு ஒழிந்ததென இகழ்தற்கிடமாம். நீங்கள் அளித்த செல்வச்சிறப்பை அரண்மனைக்குள்ளே வந்து உன் தமயன் சுக்கிரீவனோடு சுற்றிப்பார்ப்பாயாக' என்றான்.

இலக்குமணன் கோபந்தீர்ந்து கூறுதல்.

அநுமான் கூறியதைக்கேட்ட இலக்குமணன், 'நீங்கள் உதவிய செல்வத்தால் சுக்கிரீவன் பரவசனாய் உங்கள் ஆணைகடந்தால், அதன் ஆதிகாரணம் நீங்கள்தானே' என்று தாரை கூறியதைக்கொண்டும் அவளும் அநுமானும் சொன்ன மனப்பூர்வமான மதிப்பையும் வணக்கத்தையும் வெளிப்படுத்திய விநயமொழிகளையும் நன்றியறிவசனங்களையுங்கொண்டும் சுக்கிரீவன் இராமன் ஆணையை அலட்சியஞ்செய்தான்ல்லன்; நெடுங்காலம் வாலிகொடுமையால் மனையைவிட்டு மனைவியைவிட்டு வறுமையுற்று வனமே கதியாய் வருந்தியிருந்தவன் திடீரென இராச்சியப்

பெருஞ்செல்வமெய்தி இராசபோகத்திலழுந்தி மதிமயங்கி வசமிழந்ததனால் வாக்குத்தத்தத்தை மறந்தானென ஊகித்துணர்ந்து கோபத்தைவிட்டு அநுமானைநோக்கிக் கூறுகின்றான்.

'இராவணன் சீதையைக் கவர்ந்தது காரணமாக எழுந்த கோபத்தீயும் மானத்தீயும் ஒன்றுசேர்ந்து உயிரைத்தாக்க உயிரோடு உணர்வுமொடுங்கிய இராமன்தன்மை கண்டு, யான் சகியேனாகித் தருமநெறி சற்றுந் தவறாதவன் அடையும் பயன் இதுவோவென்று தருமத்தை வெறுத்துப் பகையெனத் தள்ளவும், கொடுமையை விரும்பி உறவெனக் கொள்ளவும், பழிபாராது பாவிகட்குரிய பாதகத்தொழிலைப் பற்றவும் நெஞ்சுள் நினைத்தேன. ஆயினும், என் கோபத்தை யானாகவே தணித்துக்கொண்டு; இராமனைக் கோபமாற்றித் தேற்றிக்கொண்டிருந்தேன். அதனால், நாள்கள் பல கழிந்தன. அன்றி, எங்கள் கோபம் மாறாதிருந்தால், நெடுநாட்குமுன்னமே உலகம் ஊழிக்காலநிலைமை உற்றிருக்கும். இராமன், சுக்கிரீவனை அன்புகூர்ந்து தம்பியாகக்கொண்டு, சீதையைத் தேடுங் காரியத்தை அவனாற் செய்வித்து, அதனால் அவனுக்கு சிறப்பளிக்கக் கருதியே இதுகாறும் தாழ்த்திருந்தான். அன்றேல், காகரூபமாகச் சீதையைத் தொந்தரித்த இந்திரகுமாரன், எல்லா உலகங்களிலும் ஓடிச்சென்று தேடிக், காக்கவல்லாரெவருமில்லாமைகண்டு, மீண்டு வந்து நீயே தஞ்சமென இராமனைச் சரணமடைந்து மன்னிக்கப்படும் வரையும் கொல்லல் குறித்துத் தப்பவிடாது தொடர்ந்து துரத்திய இராமபாணம் இராவணனைத் தேடிக் கொன்று சீதையை மீட்பதை யாவர் விலக்குவர்? நீங்கள் குறித்த கால எல்லையில் சேனை கொணரத் தாமதஞ் செய்ததனால், அதருமத்துக்கு அநுகூலமும் தருமத்துக்குப் பிரதிகூலமும் செய்தீர்கள்' என்று கூறி இலக்குமணன் பின்னும் கூறுகின்றான்.]

இலக்குமணன், வானரர் தாமதத்தால் தீயோர்க்கு இன்பமும், நல்லோர்க்குத் துன்பமும் பெருகியதெனல்.

506 'தாழ்வித்தீ ரல்லீர்; பன்னாள், தருக்கிய அரக்கர் தம்மை
வாழ்வித்தீர்; இமையோர்க் கின்னல் வருவித்தீர்; மாபில் தீராக்
கேள்வித்தீ யாளர் துன்பம் கிளர்வித்தீர்; பாவம் தன்னை
மூள்வித்தீர்; மூனியாதானை முனிவித்தீர; முடிதிர்' என்றான்.

இ-ள். '(நீங்கள் தாமதஞ்செய்தீர்களென்றேன். உண்மையில்,) தாமதஞ்செய்தீரல்லீர்: (மற்றென்செய்தீரெனில், குறித்த தவணையில் சேனை கொண்டுவரப்பட்டிருந்தால், உடனே அரக்கரிருப்பிடந்தேடிக் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். அரக்கர் கொல்லப் பட்டொழியவே, தேவர் துன்பம் தீர்ந்திருக்கும், பிராமணர் துன்பம் நீடித்திராது, சாந்தமூர்த்தியான இராமன் கோபங்கொண்டிருக்கமாட்டான். இத்தனைக்கும் விரோதமாக, நீங்கள் எத்தனை பல்நாள் சேனை கொண்டுவராது தாமதஞ்செய்தீர்களோ, அத்தனை) பலநாள் (அந்த) அரக்கரை (ச் சாதலினின்றுதப்பி) வாழச்செய்தீர்கள்; அவரை வாழவிட்டதனால் அவரால் (அத்தனை பலநாள்) தேவர்க்குத் துன்பம் வளரச் செய்தீர்கள்; (அத்தனை பலநாள்) முனிவர் துன்பமும் அதிகப்படச் செய்தீர்கள்; (அத்தனை பலநாள்) பாவம் (ஆகிய தீயை) மூளச்செய்தீர்கள்; (இயல்பாகக்) கோபியாத (குணமுடைய) இராமனை (அத்தனை பலநாள்) கோபிக்கச்செய்தீர்கள்: (இந்தப் பல கேடுகளுக்கும் காரணராகிய நீங்கள்) அழிந்துவிடுவீர்கள்' என்றான் (இலக்குமணன்).

'தாழ்வித்தீரல்லீர்' என்பதற்கு 'நீங்கள் காலதாமதஞ் செய்தவர்கள்மாத்திரமல்லீர்' என்பது முந்திய உரை. தாழ்தல் தாழ்த்தல் தாழ்த்துதல் தாழ்வித்தல் நீட்டித்தல் பாணித்தல் விளம்பனஞ்செய்தல் மந்தித்தல் ஆலசியஞ்செய்தல் தாமதித்தல் என்பவை ஒருபொருள் குறித்தவை. பல் நாள்—பலநாள்கள். தருக்குதல்—அகங்கரித்தல்; வருத்தல் (தமிழகராதி). தருக்கிய அரக்கர்—(தேவர் முதலிய நல்லோரைத்) துன்புறுத்திக்கொண்டிருந்த இராக்கதர். 'பன்னாள்' என்பதை 'வாழ்வித்தீர்,' 'வருவித்தீர்' முதலியவற்றோடு இயைத்தலல்லாமல், 'தருக்கிய' என்பதனோடும் இயைக்கலாம். இமையோர்—தேவர். இன்னல்—துன்பம். வருதல்—வளர்தல் (தமிழ்ச் சொல்லகராதி). 'மரபில் தீராக் கேள்வி தீ ஆளர்'—'வரன்முறையினின்றுநீங்காத நூற்கேள்விகளையும் ஓமாக்கினிகளையுமுடைய முனிவர்'. கிளர்தல்—மேன்மேல் வளர்தல்; மிகுதல் (தமிழகராதி). தீ மூளல் தீ மூட்டல் என்ற வழக்குப்பற்றிப் 'பாவம் தன்னை மூள்வித்தல,' பாவத்தீயை மூளச்செய்தலெனப் பொருள் எழுதப்பட்டது காண்க. முனிதல்—கோபித்தல். முடிதல்—கெடுதல்; சாதல்.

தாழ்வித்தல் என்பதற்குத் தாமதித்தலன்றித் தாழ்வுறச்செய்தலும் பொருளாம்: இப்பொருள்கொண்டால், இக்கவிப்பொருள்,—அரக்கரைத் தாழ்வுறச்செய்யவேண்டிய நீங்கள் வாழ்வுறச்செய்தீர்கள்; தேவர்

முனிவர் துன்பங்களைக் குறைத்திருக்கவேண்டிய நீங்கள், அதிகப் படுத்தினீர்கள்; இவ்வாருகப் பாவத்தைத் தணிக்காது வளர்த்ததனுல், இராமன்மனத்தைக் குளிரச்செய்யாமல் வெதும்பச்செய்தீர்கள்; ஆதலால் அழிவீர்கள் என்பதாம்.

அநுமான்கூறல்.

[இவ்வாறு இலக்குமணன் கூற, அநுமான் 'ஐய! கடந்ததைக் கருதலிற் காரியமில்லை. யாங்கள் செய்யத்தவறியதை இனிமேற் சித்தத்தில் வைத்தல்செய்யாது விடுக. யாங்கள் செய்வதாக ஏற்றுக் கொண்டதைச் செய்யாதுபோவேமாஞல், நீங்கள் எங்களைக் கொல்ல வேண்டியதில்லை. யாங்களே எங்களை மாய்த்துக்கொள்வேம். இது சத்தியம். இதற்குச் சாட்சி தருமதேவதையே. உள்ளேபோய் உன் தமயனைச் சேர்வாயாக' என்றான். எனவே, இலக்குமணன் 'அன்றும் நீ சொன்னபடி செய்தோம். இன்றும் உன் சொற்படி செய்வோம்' என்றுகூறி அரண்மனைக்குள்ளே போக ஆயத்தமானுன். அதை அறிந்து, வாசலில் நின்ற தாரை வழிவிலகித் தோழியரோடு அந்தப் புரத்துக்குப் போனுள்.

அப்போது அநுமானல்லாத அமைச்சரோடு அங்கதன் வந்து இலக்குமணனை அடிபணிய, 'என்வரவை உன் தந்தைக்குத் தெரிவி' எனச் சென்று சுக்கிரீவன் பாதம் வருடித் தூக்கம் நீக்கி 'ஐய! இலக்குமணன் அளவற்ற கோபத்தோடு அரண்மனைவாயிலை அடைந்தான்' என, 'நாம் குற்றமொன்றும் செய்ததில்லையே; கோப காரணம் யாது?' என், நடந்த காரியங்களைக் கூற, 'ஏன் முன்னமே என்னிடம் சொன்னுயில்லை' என, 'இலக்குமணன் நமது நகர்நோக்கி வருதலை முன்னதாக உன்னிடம் வந்து தெரிவித்தேன். சிந்தை தெளிவின்றியிருந்தாயாதலால் தெரிந்தாயில்லை' எனச் சுக்கிரீவனை செப்புகின்றுன்.

எனக்குப் பேரன்போடு பேருதவிசெய்த இராமபிரான் திறத்தில் என் அன்பும் தொண்டும் இருந்தவாறென்னே! யான் அவனுல் பெற்ற பேற்றினும் பெரும்பேறு பெற்றுர் உண்டோ! என்னைக்கொண்டு அவன் நீக்கிக் கொள்ளநினைத்திருந்த துன்பமனைத்தையும் மதுவுண்டு மறந்த மடையனேன் இலக்குமணனை எவ்வாறு காண்பேன்! காண நாணுகின்றேன்.]

சுக்கிரீவன் மது உண்ணும் மடமை பற்றி வருந்தல்.

507 'ஏயின இதுவ லால்,மற் றேழைமைப் பால தென்னோ!
தாய்இவள் மனைவி யென்னும் தெளிவின்றேல், தருமம் என்னும்!
தீவினை வேறும் ஒன்றீ தன்றியும் தெரிக்க லாமோ!
மாயையின் மயங்கு கின்றோம்! மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்!!'

இ - ள். '(ஒழித்தற்கரிய பகையை ஒழித்துப் பெறுதற்கரிய பெருவாழ்வளித்த பெருமான் துன்புறுதலை யான் மறக்கும்படி என்னிடம்) பொருந்திய (மதுவுண் மடமையே மடமை.) இதுவல்லாமல் (இதனைப்போலக் கேடுவிளைக்கும்) வேறு மடமை யாது உளது! (விலக்கியவற்றைச் செய்யாதுவிட்டு விதித்தவற்றைச் செய்வதன்றோ, தருமமாவது. காமசம்பந்தமாக விலக்கியவற்றுள் தாயிடத்துக் காமம் நுகர்தலும், விதித்தவற்றுள் மனைவியிடத்துக் காமம் நுகர்தலும் தலைமையானவை. கள்ளுண்ட மயக்கத்தில் காமம் நுகர்வானுக்கு) இவள் தாய் இவள் மனைவி யென்னும் (தெளிவில்லையாம். அவ்வாறு) தெளிவில்லையானால் (அவன்) தருமம் என்ன பயனுடையது! (கள்ளுண்ணும் தீவினையை நோக்க, ஏனைய தீவினை யாவையும் தீவினையாகா. கள்ளுண் தீவினையை ஒத்தது கள்ளுண் தீவினையே.) இஃதன்றி வேறேயும் ஒன்று (இதுபோன்ற) தீவினையாக இருப்பதைக் காட்ட முடியுமோ! (அந்தோ! மானுடரான நாமனைவரும், உண்மைப்பொருளான பரம்பொருளைத் தெரியாதபடி மறைக்கும் திரைபோலுள்ள தோற்றப்பொருளான பிரபஞ்ச) மாயையிலே (அகப்பட்டு) மயங்குகின்றோம்! (என்போன்ற பேதைகள், அந்த மாயை மயக்கத்தை நீக்க முயலாமைபோடொழியாமல், இயற்கையாயுள்ள அந்த மயக்கம் போதாதென்று செயற்கையாயுள்ள கள்மயக்கத்தையுங் கொண்டு, உள்ள) மயக்கத்துக்குமேல் (உபரி) மயக்கமுங்கொண்டோமானோம்!'

ஏயின, ஏய் (=பொருந்து) என்னும் பகுதியடியாகப்பிறந்த பெயரெச்சம், ஏய்ந்த என வருதல் பெரும்பான்மை ஏயின என அருகி வரும். உதாரணம் 'ஏயினவகையினாலே' (சிந்தாமணி 1453). ஏழைமை-பேதைமை - மடமை - அறியாமை. பால் - குணம் (பிங்கலம்) - தன்மை. ஏழைமைப்பாலது - அறியாமைத்தன்மையுடையது - அறியாமை. தெரித்தல் - தெரியச்செய்தல் - காட்டல். முதலடியில் உள்ள என்

யாதுளது என்ற பொருளும், இரண்டாம்அடி என் என்னபயனுடையது என்ற பொருளும் தருதல் காண்க.

இவள், முன் பின் வரும் தாய் மனைவி இரண்டுக்கும் இடையில் பொதுவாய்நின்று, பொருள்விளக்கம் குன்றாமல் சுருங்கச்சொல்லல் என்னும் வனப்புக்கு உதாரணமாயிருத்தலன்றி, அணிகளில் நடுநிலைத்தீவகத்துக்கும் பொருள்கோள்களில் தாப்பிசைப்பொருள்கோளுக்கும் சூத்திரநிலைகளில் சிங்கநோக்கு என்பது போலச் சொல்நிலையில் சிங்கநோக்குக்கும் உதாரணமாயிருத்தல் காண்க.

வயினிறவலால், தீவினை பைந்தி ஞெஞ்று மன்றியுந் திருக்கு நீங்கா, மயங்குகின்றார், மயக்குவைப்பார் என்பனவும் பாடங்கள்.

மாணிக்கவாசகர் திருவாசகமே வாசகசிரோமணியாய் வாசகம் (எனத்தக்க சிறப்புடையது), வேறு (அதுபோல வாசகம் எனத்தக்க சிறப்புடையது) யாதுளது, ஒன்றுமில்லை யென்ற பொருள்பட 'வாசக மனுவே வாசகம்' எனச் சிவப்பிரகாசரும், நீர் எனத்தக்கது காவிரியே; வேந்தனெனத்தக்கவன் சோழனே; மண்ணெனத்தக்கது சோழ மண்டலமே; வேறில்லை யென்ற பொருள்படத் 'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே - மண்ணாவதுஞ் சோழ மண்டலமே' என ஔவையாரும் கூறியவாறு கம்பர், மதுவுண்மடமையே மடமையென்றுனென்றார்.

கள்ளுண்ணும்தீவினை, தன்னோடொழியாமல், மற்றைத்தீவினைகள் பலவற்றுக்குக் காரணமாமென்பதைக் காட்டும் கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு. அது யாதெனில்:—

வைதிகனான வழிப்பிரயாணி யொருவன், மாமடர்ந்த வனாந்தரத்தின்மத்தியில் வழிச்சென்றுகொண்டிருந்தான். அப்போது, அங்கே, அவனெதிராக, ஒக்கலில் பிள்ளையை இடுக்கிக்கொண்டிருந்த இடக்கையில் கள்ளுக் கலசமும் வலக்கையில் அரிவாளுமாக வந்த ஒருத்தி, வழிமறித்து 'இந்த அரிவாளால் இந்தப் பிள்ளையைக் கொல்லல், என்னைச் சேர்தல், இந்தக் கள்ளைக் குடித்தல் ஆகிய மூன்றில் உனக்கிட்டமானதொன்றைச் செய்: ஒன்றுஞ் செய்யாயெனில், உன்னை உயிரோடு விடேன்; வெட்டிவிடுவேன்' என்றாள். 'இந்தச் சண்டாளி சொற்படி செய்யாவிட்டால், நிராயுதனான என்னை எளிதிற் கொன்றுவிடுவாள்,

உயிர்தப்ப இவள் சொற்படி எதைச் செய்யலாம்! சிசுஹத்தி மஹா பாதகம்! நீச ஸ்திரீ கமனம் நினைக்கவுமொண்ணாதது! இவ்விரண்டினும் மிகவும் குறைந்த தீவினை, கள்ளுண்டல். இதைச் செய்வோம். ஆபத்துக்குப் பாபமில்லை' என்றெண்ணிக் கள்ளைக் குடித்தான். குடித்தவன், முன் குடியாதவனாதலால், உடனே குடிவெறி தலைக்கொண்டு காமாவேசமுற்று அவளைச் சேர்வானானான். அப்போது அழுத குழந்தையை இடையூறாயிருக்கிறதென்று பக்கத்திற் கிடந்த அரிவாளால் வெட்டிக் கொன்றுவிட்டானென்பது.

கம்பர், காவிய காம்பீரியமும் நாடக நயமும் ஒருங்கு பொருந்தக் கதைநடத்திச் செல்வதனோடு, தக்க கதாசந்தர்ப்பங்களையொட்டி அவ்வச் சந்தர்ப்பத்தால் வலியுறுதற்குரிய தத்துவஞானம், நீதிபுணர்வு, இராச தந்திரம் உலகஅறிவு முதலிய நல்லறிவுகளைக், கவிச்சுவையோடு கலந்தூட்டுதலைக் கம்பராமாயணத்தில் எத்தனையோ இடங்களிற் காணலாம். அப்படிப்பட்ட இடங்களில் இது ஒன்று. இங்கே, கள்ளுண் தீமையை வற்புறுத்துவாராய், அதற்குப் பூர்வாங்கமாகச் செய்ந்நன்றிமறத்தற் றீமையைச் 'சிதைவகல் காதற்றாயை' என்ற செய்யுளில் நெறிதவறாத அநுமான்கூற்றாக வற்புறுத்திக்கூறி, அப்படிப்பட்ட செய்ந்நன்றிமறத்தலைச் செய்வித்த கள்ளுண்தீமையை நெறிதவறிக் கள்ளுண்டு செய்ந்நன்றிமறந்த சுக்கிரீவன்கூற்றாக, இந்த 'வயின' என்று தொடங்கும் செய்யுளில் வற்புறுத்திக்கூறிய பொருத்தம் கவனிக்கத்தக்கது.

இந்தக்கவி, ஒவ்வோரடியும் அததில் முடிவுடையதாய், எந்த அடியை எங்குக்கூட்டினும் பொருந்துவதாயிருத்தலால், அடிமறிமாற்றுப்பொருள்கோளுக் குதாரணமாம். இக்கவியின் ஒவ்வோரடியும் அறிவும் ஆனந்தமும் ஒருங்கு பயப்பதாயுள்ளது. இறுதி அடி, தத்துவ ஞானத்தையும் நீதியையும் கழிவிரக்கம் கனியச் சமத்காரமாகக் கூறிக் கம்பராமாயணத்திற் காணப்படும் அருமையினு மருமையும் இனிமையினு மினிமையுமான அமுதகவிப் பகுதிகளுள் ஒன்றாயிருத்தல் சொல்லாமலே தெரியும்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பிறர் நம்மைக் கண்ட விதம்.

இந்தியநாட்டைப்பற்றியும் இந்திய மக்களைப்பற்றியும் முற்காலத்தில் ஐரோப்பியரும் பிறரும் எவ்வாறு நினைத்திருந்தனர் என்பதைத் தமிழ்நாட்டார் அறிந்துகொள்ளற்பொருட்டு முதலாவதாக ஒடோரிக் பாதிரியார் யாத்திரைக் குறிப்பு எழுதப்படுகிறது.

ஒடோரிக் என்பவர், ஐரோப்பாவில் இத்தலிதேசத்துக்கும் ஜர்மனிதேசத்துக்கும் எல்லையாகவிருக்கும் மலைப்பிரதேசத்திலுள்ள பிரியுலி (Friuli) என்ற ஊரில் 1286-ம் ஆண்டு பிறந்தார். கல்வி கற்றபின்பு பிரான்ஸிஸ்கன்பாதிரிமார்கூட்டத்திற் சேர்ந்தார். பின்னர் உலகத்தைச் சுற்றிப்பார்க்கவும் கிறிஸ்தவமதத்தைப் பரப்பவும் எண்ணங்கொண்டு 1316-ம் ஆண்டு தம் ஊரினின்றும் பயணமாகி 1330-ம் ஆண்டு திரும்பித் தம் ஊர்க்கு வந்துசேர்ந்தார். அவர் தமது வழிச்செலவில் இந்தியா, ஜாவா, சீனம் முதலிய நாடுகளைச் சுற்றிப் பார்த்தபோது, தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதியுள்ளார். அவற்றுள் இந்தியா, சாவகம்: இவற்றைப்பற்றிய செய்திகள் ஈண்டு மொழிபெயர்த்தெழுதப்படுகின்றன.

ஊரிலிருந்து பயணமாகிக் [1]கல்தேயா சென்றேன். அது ஒரு பெரிய நாடு. அதற்குச்செல்லும் வழியில் [2]பேபல்கோபுரத்தைக் கண்டேன். இது [3]பட்டணத்திலிருந்து நாலுநாட்பயணத்திலிருக்கிறது. இந்தக் கல்தேயநாட்டில் அவர்களுக்கு என ஒரு பாஷையுண்டு; அதனையே அவர்கள் பேசுகின்றனர். ஆடவர் அழகுவாய்ந்தவர்; பெண்டிர் [4]அழகற்றவர். உண்மையிலே நம்நாட்டுப் பெண்டிரைப்போல ஆடவர் தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு செல்கின்றனர்; தலையில் பொன்னும் முத்தும் கலந்த முடியணிந்திருக்கின்றனர். பெண்டிரோ முழங்கால்வரையில் அருவருக்கத்தக்க ஒருடை

---

[1] கல்தேயா என்பது பாக்தாதைச் சுற்றியுள்ள பூர்வீகநாடு. யூபர்டிஸ் டைகிரிஸ் நதிகள் பாயுமிடம்.

[2] பேபல் கோபுரம் என்பது விவிலிய சினாய்நாட்டில் கிறிஸ்தவர்களுடைய ஆதிபுருஷரின்மக்கள் கட்டஆரம்பித்த உன்னத கோபுரம், இது கடவுளால் தடைப்பட்டதாகக் கிறிஸ்தவாது ஆதியாகமம் (பதினொராவது பிரிவு) கூறும்.

[3] பட்டினம்—பாக்தாது.

[4] நல்ல ஸ்த்ரீகள் வெளியில் வருவதில்லையாகையால் தெருவில்வருபவர்கள் நீழ்த்தரமக்களேயாவர்.

யுடுத்துச் செல்லுகின்றனர். அவர்கள் கூந்தல் பின்னப்படாமலும் வாரப்படாமலும் சிலிர்த்துக்கிடக்கின்றன. இவ்விடங்களில் நமக்குள் ஆடவர் முன்செல்லப் பெண்டிர் பின்செல்வது வழக்கமாக இருக்க, அந் நாட்டில் பெண்டிர் முன்செல்ல ஆடவர் பின்போகின்றனர். இந்நாட்டிலே ஒரு அழகுவாய்ந்த பெண்மணியை மணந்த வாலிபனொருவன் நல்லாடையணிந்துநிற்க அவன் மனைவியைப் பல மடவார் சூழ்ந்து அழுதுகொண்டிருக்கக் கண்டேன். சிறிதுநேரஞ்சென்றவுடன் மணமகன் கழுதைமேலேறிச்செல்ல மணமகள் அழுக்காடையுடுத்து வெறுங் காலோடு கடிவாளத்தைப் பிடித்துக் கழுதையை நடத்திப்போக இருவரையும் மாமன் பின்னிருந்து வாழ்த்திச்சென்றனன். இதுபோன்ற பல விடயங்கள் இந்நாட்டிலுண்டு.

அங்கிருந்து புறப்பட்டு [1]இந்திய உள்நாட்டுக்கு வந்தேன். இந்த நாட்டைத் [2]தார்த்தரிகள் மிகவும் பாழ்படுத்திவிட்டனர். இந்நாட்டிலே ஜனங்கள் [3]பேரீச்சம்பழத்தையுண்டே ஜீவிக்கின்றனர். இங்கே ஒரு [4]குரோட் நாணயத்துக்கு நாற்பத்திரண்டு இராத்தல் பேரீச்சம்பழம் கிடைக்கும்; அதுபோன்றே மற்றைய பண்டங்களும் மலிவாம்.

இந்த இந்தியாவைவிட்டு மற்றும் பல பட்டினங்களைச் சுற்றிக் கொண்டு கடற்புறம் வந்தேன். அவ்விடத்தில் நான் கண்ட முதற் பட்டினம் ஓர்மஸ். இப்பட்டினம் மிகவும் அரண்செய்யப்பட்டதும் பலவகை உயரிய பண்டங்கள் நிறைந்ததுமாகும். இந்தப்பட்டினம் நாட்டிலிருந்து கடலில் ஐந்துகட்டை அளவில் ஒரு தீவில் இருக்கின்றது. அங்கு மரமாவது நல்லதண்ணீராவது கிடையாது. ஆயினும், ரொட்டியும், மீனும், புலாலும் மிகுதி. அது வாசயோக்கியமற்றது; அங்கே உயிருக்கும் ஆபத்துண்டு. வெப்பமோ பொறுக்கமுடியாது. ஸ்திரீ புருஷர்கள் வெகு நெட்டையானவர்கள். ஒருநாள் ஒரு தெருவிற் செல்லுகையில் ஒரு வீட்டைக் கடந்து சென்றேன். அவ்வீட்டில் ஒரு

---

[1]பாரசீகக்குடாவுக்குப் பக்கத்திலுள்ள நாட்டை ஐரோப்பியர் இந்தியா வென்றே கண்டனர். இதற்குக்காரணம் இந்தியவியாபாரம் முழுவதும் ஓர்மஸ் என்ற ஊரிலேயே நடப்பது வழக்கமாகவிருந்ததா லாம்.

[2]Tartars. இவர்கள் ஒருவகை முகம்மதிய மதத்தினர்.

[3]நம்நாட்டில் தெருவில் விலைபோகும் பேரீச்சம்பழம் அந்நாட்டிலிருந்து இறக்குமதியாவதாகும்.

[4]குரோட் (Groat) 1351-ம் ஆண்டில் மூன்றும் எட்வர்டால் வெளியிடப் பட்ட 4 பென்ஸ் மதிப்புள்ள வெள்ளிநாணயம்.

வன் இறந்துகிடந்தான். அதிலுள்ளார் ஊரிலுள்ள வாத்தியக்காரரெல்லோரையும் கூட்டிவைத்துக்கொண்டு சவத்தை அவனுடைய படுக்கையில் வீட்டின்நடுவிற் கிடத்தினர்கள். இரண்டு ஸ்திரீகள் அந்தச் சவத்தைச் சுற்றிக் கூத்தாட, மற்றெல்லோரும் தாளத்துக்குத்தக்கபடி வாத்தியம் ஊதினர். பின்னர் இருபெண்டிர் சவத்தைக் கட்டிக்கொண்டு அவன் பெருமையைச் சொல்லிப் பிலாக்கணம்பாடி யழுதனர்; ஸ்திரீகள் வரிசையாக நின்றுகொண்டு ஒருவர்பின் ஒருவராய் வாத்தியம் ஊதி யிராமுழுவதும் காலத்தைக் கழித்தனர். விடியற்காலையிற் சவத்தை அடக்கத்திற்கு எடுத்துச் சென்றனர்.

[இரும்புசேர்த்துப் பிணைக்கப்படாத கப்பலில்
ஒடோரிக் பாதிரியார் இந்தியாவிலுள்ள தானாவுக்குச் சென்றது]

இந்த நாட்டில் ஜனங்கள் [1]ஜஸ் என்ற பேருள்ள மரக்கலங்களை உபயோகிக்கின்றனர். இவை சணல்நூலினால் தைக்கப்பட்டிருக்கின்றன. இந்தமாதிரியான மரக்கலமொன்றில் யான் பிரயாணமானேன். அதனில் ஒரு துண்டு இரும்புகூடக் காணப்படவில்லை. இவ்வாறு அதனிற் புறப்பட்டு 28-நாளில் [2]தானாவையடைந்தேன். அவ்வூரில் நமது கிறிஸ்தவசமயத்திற்காக நான்கு பாதிரிகள் உயிர்துறந்தனர். அப்பட்டினம் தகுந்த இடத்தில் அமைந்துள்ளது. ரொட்டியும் சாராயமும் அங்கே மிகுதி. அவ்வூர் மரங்கள் செறிந்துள்ளது. முற்காலத்தில் இது ஒரு பிரசித்த பட்டினம். இங்கிருந்துதான் போரஸ் அரசன் அலெக்ஸாந்தரோடு கடும்போர் புரிந்தான்.[3] அந்நாட்டிலுள்ளார் விக்கிரகங்களுடன் அங்கி, நாகம், மரம் இவைகளையும் ஆராதிப்பவர். இப்பொழுது அந்த நாடு துருக்கர்களால் பலவந்தமாகப் பிடுங்கப்பட்டு டில்லிசக்ரவர்த்திக்கு உட்பட்டதாகவிருக்கின்றது.

இங்கே பலவகை மிருகங்கள் காணப்படுகின்றன. கருஞ்சிங்கங்கள் மிகுதி. குரங்கும் மந்தியும் புறா அளவுள்ள [4]வௌவால்களும் காணப்படுகின்றன. ஷேர்ப்பியென்று நம்நாட்டிற் காணப்படும் நாயைப்

---

[1]இது பாரசீகமொழி. மார்க்கோபோலோ, பெரிஷ்நல் முதலானவர்கள் இந்தியநாட்டிற் காணப்படும் தோணி, படகு, மரக்கலம் முதலியவற்றைக் கண்டு அதிசயமடைந்தனர். இன்றும் படகுகள் கப்பல்களில் இரும்புப் பிணைப்பின்றித் தென்னைநாரையடித்துச் சந்துகளுக்கிட்டுக் கட்டுவது வழக்கம்.

[2]பம்பாய்க்கு அருகிலுள்ள ஒரு பட்டினம்.

[3]இந்தச்செய்தி கதையாக இவ்விடங்களில் வழங்கியதுபோலும்.

[4]பழந்தின்னி வௌவாலைக் கண்டனர்போலும்.

போல் எலிகள் காணப்படுகின்றன. இதனாலே பூனைகள் எலிகளைப்பிடிக்க முடிவதில்லை. அதற்காக நாய்கள் உதவுகின்றன. இந்தத் தேசத்தில் ஒவ்வொருவீட்டு முன்வாயிலிலும் தூண்போன்ற பருமனுள்ள சில [1]கிளைகள் வைத்து வளர்க்கப்படுகின்றன. இவை நீர்வார்க்கப்படும்வரை காய்வதில்லை. இன்னும் சொல்லத்தகுந்த பல அதிசயமான செய்திகளுண்டு.

இங்கே பெண்டிர் [2]ஆடையின்றிச் செல்கின்றனர். ஒரு ஸ்திரீக்கு மணச்சடங்கு நடக்கும்போது அவளை ஒரு குதிரையிலேற்றி அவள் கணவன் குதிரைச் சேணவாரைப் பிடித்துக்கொண்டு ஒரு கத்தியை அவள் கழுத்துக்குநேரே நீட்டிச்செல்வான். அவர்கள் உடலில் ஒன்றும் அணியாமல் தலையில்மாத்திரம் வெள்ளைப் பூவோடுகூடிய ஒரு முடியணிந்திருக்கின்றனர். ஊர்ப்பெண்களெல்லோரும் சேர்ந்து அவர்கள் வீட்டிற்குள் நுழைகிறவரையில் முன்னே பாடிச்செல்லுவார்கள். மணமக்கள் வீட்டுள் நுழைந்ததும் அவர்களைத் தனியேவிட்டுவிட்டு மற்றெல்லோரும் போய்விடுவார்கள். மறுநாட்காலை மணமக்கள் ஆடையின்றிவெளிவருவர்.

இந்நாட்டில் [3]லோக் (Loache) என்ற சாராயம் கொடுக்கும் மரங்கள் இருக்கின்றன. அச்சாராயங்கள் மிக்க போதையுள்ளவை. இந்நாட்டில் இறந்தவரைப் புதைக்கும்வழக்க மில்லை; ஆனால் அவர்களை விலங்குகளும் பறவைகளும் பிடுங்கித்தின்னும்படி வயல்களிற் போட்டுவிடுகின்றனர்;[4] நல்ல காளைமாடுக ளுண்டு; அவை நீண்ட கொம்புகளும் ஒட்டகத்துக்கிருப்பதுபோன்ற திமிலு முடையன. இங்கிருந்து பதினாலுநாட் பயணத்தில் [5]பரோக் என்ற பட்டணம் இருக்கிறது. நான் முன் சொன்னபடி தானா என்ற இந்த ஊரில் நான்கு சின்னமடத்துப் பாதிரிகள் உயிர்துறந்தனர். [தொடரும்.]

---

[1] துளசிமாடத்தை இவ்வாறு உருவகப்படுத்திவிட்டாரென்பது நூற்பதிப்பாசிரியரபிப்பிராயம்.

[2] மெல்லிய மஸ்லீன் ஆடையை இவ்வாறு கொண்டனர்போலும்.

[3] இதற்கு அரபிபாஷையில் ருஅஹ் (Rukh) என்று பேர். இது தென்னை பனை முதலியவற்றி லுண்டாகும் கள்ளைக் குறிக்கும்.

[4] பாரசீகர் இவ்வாறுசெய்வது இன்றும் வழக்கம்.

[5] இது விளங்கவில்லை.

இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை,

திரு. சோமசுந்தரதேசிகன்.

எயினர்.

(By V. R. Ramachandra Dikshitar, M.A.)

சில ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னர்த் தென்னிந்தியாவில் எந்த ஜாதியார்கள் எவ்விதமாய் வசித்தார்களென்று பலவிதமாய் ஆராய்ச்சி நிபுணர்களால் ஊகிக்கப்பட்டுவருகிறது. இந்தியசரித்திர ஆராய்ச்சிக் காரர்களால் பண்டைக்காலங்களில் நாகரிகமில்லாத ஜாதிப்பிரிவினர் பலர் காடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் வசித்தார்களென்றும், பிறகு திராவிடர்களென்று ஒருஜாதியார் இந்தப் பிரதேசத்தில் குடியேறினார்களென்றும், இவருக்குப்பின்னரே தமிழ்நாடு திராவிடதேசமென்று வழங்கிற்றென்றும், திராவிடர்களுக்குப் பின்னர் ஆரியர்கள் குடியேறினார்களென்றும், பெரும்பாலும் கருதப்படுகிறது.

தற்காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் சங்கநூல்களிற் கண்ட ஆதாரவுகளால் பண்டைத் தமிழ்மக்கள் ஐந்து பிரிவினர்களாய் வசித்து வந்தவர்களென்பது தெரியலாம். அதாவது தமிழ்நாடு ஐந்துவகைத் திணைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அத்திணைகளாவன: (1) குறிஞ்சி (2) பாலை (3) முல்லை (4) மருதம் (5) நெய்தல் என்பனவாம். இவைகளில் குறிஞ்சி மலைப்பிராந்தங்களென்றும், பாலை காடும் மலையுங் கலந்த நிலங்களென்றும், முல்லை காடுசார்ந்த நிலங்களென்றும், மருதம் நீர்வளமுள்ள நிலங்களென்றும், நெய்தல் கடற்கரைசார்ந்த நிலங்களென்றும் தொல்காப்பியம் முதலிய பழையநூல்களிலிருந்து விளங்குகின்றன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலிருந்து தொல்காப்பியனார் காலத்திற்குமுன் இந்த ஐந்து திணைகள்சம்பந்தமாய் இரண்டு பழமையான ஜாதியார்கள் இருந்தார்களென்று தெரியவருகிறது. அவர்கள் ஆயர், வேட்டுவர் என்பவராவர். ஆயர் பெரும்பாலும் தற்காலம் இடையர் கோனார்என்று வழங்கிவருகிற ஜாதியார்களுக்கு முன்னோராக இருக்க வேண்டும். வேட்டுவர் காட்டில் வசித்துவந்த வேடர்களே.

"பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே"

"ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய
ராவயின் வரூஉங் கிழவரு முளரே."

"ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை
யானு வகைய திணைநிலைப் பெயரே." (தொல். பொரு. 1. 20-22.)

பாலைநிலத்திற்குரியவர்களாயும், வேட்டுவர்களான வேடர்களுள் ஒருவகுப்பினராகவும் உள்ளவர் எயினராவர்; சவரர், புளிந்தர் என்பவர்களும் இந்த மரபினைச் சேர்ந்தவர்களென்றே தெரிகிறது. பெருங்கதை. I. 55. 856. இவர்களுக்கு மறவரென்றும் ஒரு பெயர் வழங்கிவந்தது.

எயினர் இருப்பிடம், பழக்க வொழுக்கங்களைப்பற்றிச் சங்கச் செய்யுள்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக அவர்களிருப்பிடம் நாட்டிற்கு உப்பால் காட்டை ஒட்டினதென்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. ("கானமு மெயினர் கடமுங் கடந்து" xi. 79.)

இவர் ஊரைச்சுற்றி நாற்புறங்களிலும் அடர்த்தியான முள்வேலிகள் சூழ்ந்துகிடந்தன. இதனால், பகைவர்களாலும் மற்ற அந்நியர்களாலும் எக்காலத்திலும் மேற்செல்ல முடியாது. இதுவுமன்றி, காவற்காரர்களால் பாதுகாக்கப்பட்டும் வந்தது. இவ்வூர்நடுவில் மன்ற மென்னும் பொதுத்தலமும் உண்டு. அம்மன்றத்தில் எயினர் ஒன்றுகூடியுண்டு ஊர்ப் பொதுவிஷயங்களை ஆலோசித்து அவைகளை ஒரு முடிவிற்குக் கொண்டுவந்தார்களென்றும் தோன்றுகிறது. (சிலப்பதிகாரம் xii. 10-11.) மேலும், இவர்கள் ஊர்ப்பக்கத்தில் ஓர் கோட்டத்தைக்கட்டி அதில் தங்கள் தெய்வமான குமரிமாதேவியைத் தாபித்துத் தொழுது வந்தார்கள். கோட்டத்திற்கு வெளிப்புறத்தில் இத்தெய்வத்திற்குப் பலி கொடுக்குமிட முண்டு. இதைச்சுற்றி எலுமிச்சை, நாரத்தை முதலிய செடிகளும் இலவங்கம் முதலிய மரங்களும் சூழ்ந்திருந்தன. இதன் சமீபத்தில் வெறியாடல் முதலியவைகள் நிகழ்வது வழக்கமாம்.

பழக்க வொழுக்கங்கள்.

அவர்களுக்கு முக்கியமான ஆயுதங்கள் அம்பும் வில்லுமாம். ஆகவே இவர்கள் வில்வித்தையில் கைதேர்ந்தவர்கள் என்பது தெரியலாம். இவ்வாயுதங்கள் மூங்கிலாற் செய்யப்பட்டவை. அவர்கள் தங்களுக்கு இயற்கையாயமைந்துள்ள பலத்தினால் சத்துருக்களின் தலையை அறுத்துக் கொல்லும் தன்மையையுடையவர்களானபடியால் அவர்கள் புலிக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றனர். பராக்கிரமமும் பலமும் வாய்ந்துள்ள இவர்களை வெல்வது மிக அரிது. ஆகவே தமிழ்மன்னர்கள் இவர்களைத் தங்கள் சேனையிற் போர்வீரர்களாக நியமித்தார்கள்.

மேலும், நீண்ட தாடியையுடைய இவர்கள் கண்ணோட்டமில்லாதவர்களாயும் நயமில்லாத மொழியைப் பேசுபவர்களாயு மிருந்தனர். இவர்கள் தொழிலோ இருளில் வெளியிற் புறப்பட்டு வழியிற் போவாரை

அடித்துப் பறித்தலாகும். பட்டினப்பாலையிலிருந்து இவர்கள் நெற் களங்களிலிருந்து நெல்லைத் திருடிப்போவதுமுண்டு என்று தெரியலாம்.

அன்றியும், இவர்களுக்கு இன்னொருதொழிலுமுண்டு. அதாவது அக்கம்பக்கத்துள்ள கிராமங்களுக்குப்போய் அவ்விடமுள்ள ஆடு மாடு களைக் கவர்ந்துகொண்டுவருவதாகும்.

இவர்கள் முன்னோர்களின் வழக்கம் யாதெனில் ஜயித்துக் கவர்ந்து வந்த பசுநிரைகளைத் தங்களுக்கு உதவிபுரிந்த கிராமத்துக் கொல்லன், துடிமுதலிய வாத்தியம்வாசிப்போர், யாழ்பாடும் பாணர், கள்ளுக்கடைக் காரர், ஒற்றனாயிருந்த கானவன், பட்சிசாத்திரமோதிய சோதிடன் முதலியவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பதும், தெய்வப்பலிகொடுப்பது மாம். இப்பலி நரபலியென்றே தோன்றுகிறது.

"விலைப்பலி யுண்ணு மலர்ப்பலி பீடிகைக், கலைப்பரி யூர்தியைக் கைதொழுதேத்தி" என்று இத்தெய்வம் யாழ் என்பதைச் சிலப்பதிகா ரத்தில் இளங்கோவடிகள் நன்குவிரிக்கின்றார். இது பின் விரிக்கப்படும்.

இவர்களுக்கு மற்றொருதொழிலு முண்டு. காட்டில் துஷ்ட மிருகங்களை வேட்டையாடி, அவைகளின் மாமிசம், தோல், பல், கொம்பு முதலியவைகளை உபயோகித்துக்கொண்டார்கள். புலிகளைக் கொன்று தோலை மேல்வஸ்திரமாய் உபயோகித்தார்கள். ஆகவே எயினரின் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் மிருகங்களின் தோலை ஆடையாகக் கொண்டவர் என்பது தெரியலாம். அதிலும் பெண்பிள்ளைகள் இடைப்புடை மேலுடை என்ற இரண்டு உடைகளைத் தற்காலம் மலையாளதேசத்திலுள்ள அச்சிமார்களைப்போல உடுத்துவந்தார்களென்றும் கருதப்படுகின்றனர். காட்டுப்பன்றிகளைக் கொன்று அவைகளின் தந்தத்தைத் தலைச்சூடி யென்கிற ஓர் அணியாகப் பூண்டுகொண்டார்கள். புலிப்பல் வரிசைகளைக் கோத்து மாலையாகச் சூடினார்கள். இவர்களிடத்தில் நாகரிகமற்ற பாட்டுக்களும் வாத்தியங்களும் பரவியிருந்தன. பறை, துடி, கொம்பு முதலியன முக்கியமான பாட்டுக்கருவிகள். குழலூதவும் யாழ்வாசிக்க வும் இவர்களுக்குத் தெரியும். கிளி, மயில், கோழி இவைகளை வீட்டில் வளர்த்துவந்தார்கள், பட்சிசகுனசாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், பட்சிகள் பறப்பதிலிருந்து தங்களுக்கு நேரும் இடையூறுகளையும் ஜயத்தையுமறிந்து அதன்படி தங்கள் காரியங்களை நடத்திவந்தார்கள்.

இவர்கள் மூடபக்தியுள்ளவர்கள். இவர்கள் தெய்வம் கொற்றவை என்று பிரசித்தபெற்ற தேவியாவள். இத்தெய்வம் சிங்கக்கொடிபறக்கத்

தம்முன் நின்று வெற்றியை அளிப்பது பாம்பரையாகவந்த வழக்கம் என்பது அவர்கள் நம்பிக்கை தாங்கள் சுவர்ந்துகொண்டுவந்த தனத்தில் இத்தெய்வத்திற்கு ஒருபங்கிட்டு அவிப்பலிமுதலியவை யிட்டு வேண்டிக் கொண்ட பிரார்த்தனையைத் தவறாமல் நடத்துவதே அவர் தர்மமாகும். அப்படிச்செய்யாவிடின் தங்களுக்கு வெற்றி உண்டாகாதென்றும், அத் தெய்வத்தின் கோபத்தால் தம் குடிச்சிறப்பு அழிந்துவிடுமென்றும் பூர்ண எண்ணங்கொண்டவர்கள். அப்படி இடையூறநேர்ந்த சமயத்தில் வெறியாடலென்று ஓர் கூத்து ஏற்பாடுசெய்வர்; அக்கூத்தில் சாலினி என்று வழங்கும் ஒரு எயினகுமாரத்திமேல் ஆவேசம் நிகழும். அவள் தெய்வத்தன்மையோடு ஆடல் பாடலுடன் குமரிமகாதேவிக்குச் செய்யத்தவறியதையும் செய்யவேண்டியதையும் தெரிவிப்பாள். அதன் படி பிரார்த்தனைசெலுத்துவதே வழக்கமாம்.

இவ் வெறியாடலைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம். மறக் குடியைச் சார்ந்த சாலினி என்கிற ஒரு மாது கண்டோர் புளகமுறக் கால்களை மாற்றி மாற்றிக் கூத்தாடுவள். அந்த வெறியாடற்காலத்தில், குமரிமாதேவதை என்னென்ன அணிகளைச் சூடியிருந்தாளோ அவ்வாபரணங்களை அணிந்த கோலத்துடன் ஆடுவது வழக்கம். பொற் றொடி, நெற்றிச்சுட்டியான ஒரு தங்கப்பாம்பு முதலியன முக்கிய அணி கள். அவள், கூந்தல்முடியிற் காட்டுப்பன்றியின்கொம்பை நட்டுப் புலிப்பற்களாற் கோக்கப்பட்ட ஓர் மாலையைப் பூண்டு, வரிக் கோடுக ளோடுகூடின புலித்தோலை மேலாடையாகவும், ஓர் கலைமானை வாகன மாகவும் கொண்டு, கைகளில் பொம்மை, கிளி, சிறகுகள், காட்டுக்கோழி, மயில், பந்து, கழங்குகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு, வர்ணம், சந்தனம், தின்பண்டங்களின்வகைகள், புஷ்பங்கள், சாந்து, வாசனைப் புகை முதலியவைகளைக் கையிலேந்திய வேலைக்காரர்களுடன் இருபக்கங் களும் பறைவழங்க, கொம்புமுதலிய வாத்தியம் முழங்க, மணிகள் ஒலிப்ப, ஐயைகோட்டத்தின் முன்வாயிலைச்சேர்ந்து, ஆடலில் அமர்ந்து தெய்வத்தன்மையை அடைந்து ஆடுவதும் இயல்பாம், இதை வள்ளிக் கூத்தென்று உரைப்பாருமுளர்.